பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

35 ] சென்னை — ஞாயிறு, டிசம்பர் 8, *1946.* [ விலை. அணு. 2

## *பிரிட்டிஷ் கொள்கை*

*ஒரு நிருபர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் :—*

*சென்றவாரம் பிரிட்டிஷ் தினசரிப் பத்திரிகை ஒன்றின் டைரக்டர் தங்களை புது தில்லியில் பேட்டி கண்டாரல்லவா? அவர் இப்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலான நிலைமையின் காரணங்களை அறிந்து கொள்ள வேண்டுமானால் கீழ்க்கண்டதைப் படித்தால் நல்லது.*

*வைசிராய் தம்முடைய குரு ஆலன்பி என்ன செய்தாரோ அதையே அணுவளவும் பிறழாமல் செய்து வருகிறார். வைசிராய் ஆலன்பியின் சரித்திரத்தை எழுதி யிருக்கிறார். அதில் அவர் கூறுவதாவது :—*

*"எகிப்து ஜனங்களுக்கு சுயராஜ்யம் நடத்துவதற்காக வேண்டிய பயிற்சியை அளிப்பதே நம்முடைய கொள்கை என்று கூறுகிறோம். அப்படி கூறுவது உண்மையானால் அவர்கள் ஆட்சி செய்யும் பொழுது அதில் தலையிடுவதும் ஏதேனும் சிக்கலேற்பட்டால் ஆட்சி முழுவதையும் நாமே புரிய ஆரம்பிப்பதும் உபயோகமற்றதாகும். மந்திரிகளும் உத்தியோகஸ்தர்களும் ஆட்சிபுரியக் கற்றுக்கொள்ள வேண்டுமானாலும் போலீஸ் அமைதியைப் பாதுகாப்பதற்குரிய திறமை யுடையதாக இருக்க வேண்டுமானாலும் சேனை அவர்களுக்கு அவசியமான சமயத்தில் உதவி செய்யக் கூடியதாக இருக்க வேண்டுமானாலும் அவர்களாகவே தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும் அபாயங்களையும் நிவர்த்தி செய்துகொள்ளும்படி விட்டுவிட வேண்டும் ஏதேனும் சங்கடமான நிலைமை ஏற்பட்டால் பிரிட்டிஷ் உதவியை நாடும்படி இடந் தரலாகாது."*

*இதில் எகிப்தியர் என்பதிற்குப் பதிலாக இந்தியர் என்று எழுதிக் கொண்டால் வைசிராயின் கொள்கை எது என்பது நன்கு விளங்கும். ஆனால் சென்ற இரண்டு வாரங்களாக அதிகாரிகள் தலையிட வேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டதைப் பார்க்கும் பொழுது வருத்தமா யிருக்கிறது. இது உங்கள் கொள்கையை நிரூபித்துக் காட்டுகிறது. கீழ்க்கண்ட வரிகளும் நமக்கு விஷயத்தை நன்கு விளக்கு வதா யிருக்கின்றன.*

*எகிப்தில் சில கலகங்கள் நேர்ந்தபின் ஆலன்பி தம்முடைய தாயாருக்கு "எகிப்தியர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். ஐரோப்பியர்களைப் பாதுகாப்பதற்கு மட்டும் என்னுடைய துருப்புகளை உபயோகிக்க வேண்டுமென்றும் எகிப்தியர்களுடைய காரியங்களில் என்னுடைய துருப்புக்களை உபயோகியாமலிருக்க வேண்டுமென்றும் நான் எண்ணி இருக்கிறேன்" என்று எழுதுகிறார்.*

*இது தெள்ளத் தெளிவாக இருக்கிறது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை "கடவுளிடமோ அல்லது அராஜகத்திடமோ" விட்டு விட்டு வெளியேறி விட வேண்டுமென்று தாங்கள் ஒரு சமயம் கூறினீர்கள். அந்த விதமாகச் செய்யும்படி தங்களைப் பார்க்க வந்த பிரிட்டிஷ் பத்திரிகா நண்பர் தம்முடைய ஜாதியாரிடமும், சர்க்காரிடமும் கேட்டுக் கொண்டால் நலமாயிருக்கும். அதுதான் சரியான யோசனை. ஆனால் அது எப்பொழுதும் உடனே அமுல் நடத்தப் படுவதில்லை. பிரிட்டிஷ் துருப்புகள் எகிப்தைவிட்டு இன்னும் வெளியேறாமல் இருந்து கொண்டு தானிருக்கின்றன.*

### *"வழி விடுக"*

*வைசிராய் தந்தியனுப்ப விரும்பினால் உடனே மற்ற தந்திகளை எல்லாம் நிறுத்தி வைத்து விடுகிறார்கள். வைசிராய் ரயிலில் பிரயாணம் செய்தால் வைசிராயின் விசேஷ வண்டி போவதற்காக மற்ற வண்டிகளெல்லாம் நிறுத்தப் பட்டு விடுகின்றன.*

*யுத்தகாலத்தில் ராணுவத்தின் தேவைகள்தான் ஜனங்களின் தேவைகளைவிட பிரதான மாகக் கருதப்பட்டன. யுத்தம் நடந்த படியால் அதை யாரும் ஆக்ஷேபிக்க வில்லை.*

*உடம்பிலுள்ள உறுப்புக்களும் ஜீவாதாரமான காற்றும் தங்களுக்குள் யார் உயர்ந்தவரென்று விவாதம் நிகழ்த்தியதாக ஒரு கதை உபனிஷத்தில் காணப்படுகிறது. கண்கள் ஒரு வருஷகாலம் வேலை நிறுத்தம் செய்தன. அதன்பின் காதுகளும் மூக்கும் நாக்கும் வேலை நிறுத்தம் செய்தன. அப்படியிருந்தும் உடம்பு ஜீவித்துக்கொண்டு தானிருந்தது. ஆனால் காற்று வேலை நிறுத்தம் செய்யப் போவதாக பய முறுத்தியவுடன் பெரிய கலக்கம் ஏற்பட்டு விட்டது. அவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து "நீர்தான் உயர்ந்தவர், எங்களை விட்டுப் போய்விட வேண்டாம். நீர் இல்லாமல் நாங்கள் வாழ முடியாது" என்று கூறின.*

*பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் சர்க்காரும் சமூகமும் தேசத்தின் ஆன்மாவாகிய ஏழை மக்களை கவனியாமலிருந்து விட்டார்கள். அது தற்கொலை செய்து கொள்வதாகும். விவசாயிக்கும் தொழிலாளிக்கும் உண்பதற்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. நம்முடைய வீடுகளில் பெண்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சுகமாக வாழ்கிறார்கள். நம்முடைய தேசத்தில் ஆதிக் குடிகளுக்குத் தவிர மற்றவர்கள் எல்லோருக்கும் குடியிருக்க இடமிருக்கின்றது. ஆதிக் குடிகளைக் காடுகளுக்குத் துரத்திவிட்டோம். அவர்களில் பல வம்சங்கள் அழிந்து போய்விட்டன. ஜனங்களைப் பாதுகாக்கும் விவசாயியைக் கீழே தள்ளிவிட்டோம் அரசர்கள், உத்தியோகஸ்தர்கள் டாக்டர்கள் வக்கீல்கள் போன்றவர்களை உயர்ந்தவர்களாகக் கருதுகிறோம். அவர்கள் விவசாயிகளையும் தொழிலாளிகளையும் கெடுத்தே வாழுகிறார்கள். வரிப் பளு முழுவதையும் கடைசியில் விவசாயிகளே தாங்குகிறார்கள். ஆனால் இந்த நிலைமை நீடித்து நிற்க முடியாது.*

*மில் முதலாளிகள் தங்களுக்குப் பிரியமான தொழிலை நடத்தலாமென்றும் ஆனால் வாழ்விற்கு அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவைகளாயும் சொற்ப முதலைக் கொண்டும் திறமையைக்*

*தூய்மையான உள்ளமே உண்மையான அழகு. —காந்திஜி.*

கொண்டும் பாமர ஜனங்களால் செய்யக்கூடியவைகளாயுமுள்ள கைத்தொழில்களை அவர்கள் செய்யக் கூடாது என்றும் காந்தி அடிகள் அவர்களிடம் சொல்லி இருக்கிறார். இப்படிச் செய்தால் ஏழைகளுக்கு ஏதோ தானமளித்துவிட்டதுபோல் மில் முதலாளிகள் எண்ணிவிட வேண்டாம். யாரிடமிருந்து நாட்டின் சக்தி உற்பத்தியாகிறதோ அவர்களுடைய ஆணையின்படி அவர்களுடைய தொழில்களில் கைவையாமலிருப்பதேயாகும். இன்று பாமர ஜனங்கள் தங்களுடைய உரிமைகளையும் நலன்களையும் அறியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அட்டையைப்போல் தங்களுடைய ரத்தத்தை யார் குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறியாமலிருக்கிறார்கள். அவர்களுடைய பலமும் அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் இன்று அவர்கள் உண்மையான சொந்தக்காரர்களாய் இருப்பதற்குப் பதிலாக பிச்சைக்காரர்கள் போல் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆதலால் காந்தியடிகள் அவர்கள் வேண்டிக் கொள்ளாமலே அவர்களுடைய வக்கீலாக இருந்துகொண்டு கதர் முதலிய கிராமக் கைத்தொழில்களில் கைவைக்கக் கூடாது என்று முதலாளிகளுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். காந்தியடிகள் முதலாளிகளிடம் கூறுவதாவது :—

“மில்களை ஏற்படுத்தி ஏழைகளுக்கு வேலை இல்லாமல் செய்துவிடாதீர்கள். கதர் உற்பத்தி செய்யக்கூடிய இடத்திற்கு மில்துணியை அனுப்பாதீர்கள். தண்டவாளங்களையும், கிராமபோன்களையும் ரேடியோக்களையும் எஞ்சின்களையும் மோட்டார்களையும் ஏரோப்ளேன்களையும் நீங்கள் உர்பத்தி செய்யலாம். ஆனால் விவசாயம், ஆடு, மாடு வளர்த்தல் துணி உற்பத்தி செய்தல் முதலிய கிராமக் கைத்தொழில்களை கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு விட்டுவிடுங்கள். அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யுங்கள். ஆனால் அவர்களை கிராமங்களிலிருந்து பிடுங்கி வேறு இடத்தில் நட்டுவிடாதீர்கள். அவர்களுக்கு வாழ்வுதான் கல்வி. அதற்கு ஆதாரம் கைத்தொழில். அதன் மூலமாக அவர்களுடைய அறிவை அபிவிருத்தி செய்யலாம். உங்களுடைய கல்வி கொலைசெய்யும் தன்மையுடையது. அதை அவர்களுக்கு கொண்டுபோய் கொடுக்கவேண்டாம். நயீதலீம் கல்வி முறைதான் உயிரளிக்கக் கூடியது. அது கைத்தொழிலின் மூலமாக அறிவையும் உடம்பையும் ஆன்மாவையும் ஒருங்கே அபிவிருத்தி செய்யும். அதைத்தான் நாடெங்கும் பரவும்படி செய்யவேண்டும். அதற்குத் தான் பிரதானமான ஸ்தானம் கொடுக்கவேண்டும். உங்களிடம் பணமும் அதிகாரமும் இருக்கின்றன. ஆனால் கிராமவாசிகளுடைய முதல் அவர்களுடைய தொழில்தான். அவர்கள் தங்கள் முதலின் மகத்துவத்தை அறிந்து கொண்டால் அவர்களே நாட்டின் அதிகாரிகள் ஆவார்கள். நீங்கள் அவர்களைப் பகைத்துக் கொண்டால் உங்களுக்குக் கேடே உண்டாகும். அவர்கள் எவ்வளவு பொறுக்கமுடியுமோ அவ்வளவு பொறுத்தாகிவிட்டது. ஆதலால் அவர்கள் பெறுமை இழந்து போகுமுன் நீங்கள் சரியானபடி நடந்து கொள்ளுங்கள்.

கைத்தொழில்களுக்கு “வழி விட்டு விலகி நில்லுங்கள்.” துணி மில்கள் புதியன ஏற்படுத்தவும் இப்பொழுதுள்ள மில்களை விரிவாக்கவும் வேண்டாம். கதர்த் துணியோடு மில் துணியை போட்டி போடும்படி செய்ய வேண்டாம். மில்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு வாழ்விற்கு வேண்டிய இன்றியமையாத தேவைகளாகிய உணவு முதலிய பொருள்களை போதுமான அளவு கொடுங்கள்.”

காந்தியடிகள் சர்க்காருக்கும் பொதுஜனத் தலைவர்களுக்கும் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—“நீங்கள் இன்று ஜனங்களை ஆண்டு வருகிறீர்கள். அவர்களுடைய க்ஷேமத்தைப் பிரதானமாகக் கருதாவிட்டால் அவர்களே ஆட்சியை உங்களிடமிருந்து பறித்துக்கொள்ளும் காலம் சீக்கிரமாக வந்துவிடும். ஜனங்களுத்குக் கோபம் ஏற்பட்டு விட்டால் அவர்கள் புரட்சி செய்யவும் தற்கொலை செய்துகொள்ளவும்கூட தயாராகி விடுவார்கள். அப்படி கோபத்தில் அறிவில்லாமல் செய்யும் புரட்சி நிலச் சுவான்தார்களையும், முதலாளிகளையும், முஸ்லிம் லீகையும், ஹிந்துமகா சபையையும், கவர்னர்களையும் ஒருங்கே அழித்துவிடும். அத்தகைய புரட்சி ஏற்பட்டால் அவர்கள் எல்லோரும் நடுநடுங்குவார்கள். இப்பொழுது கத்திகளைக்கொண்டு திரிவோர்கள் அதுவரை உயிரோடிருந்தால் சந்துபொந்துகளில் போய் ஒளிந்து கொள்வார்கள். ஆதலால் இப்பொழுதே விழித்துக் கொள்ளுங்கள். பாமர ஜனங்கள் நாச வேலையில் இறங்குவதற்கு முன்னதாகவே நீங்கள் அவர்களுக்கு உயிர் தரக்கூடிய நிர்மாணக் கல்வியைக் கொடுங்கள். கதர் முதலிய கிராமக் கைத்தொழில்களைச் செய்வதற்கு வேண்டிய பயிற்சியை அளியுங்கள். நீங்கள் அந்த வித்தையைக் கற்றுக் கொண்டு அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். எந்தக் காரியம் செய்தாலும் ஜனங்களின் க்ஷேமமே ஜீவநாடியாக இருக்க வேண்டும். இப்பொழுது வைசிராய்க்கு பிரதானம் கொடுக்கப் படுகிறது. அதை விட்டுவிட்டு பாமர ஜனங்களுக்கே பிரதானம் கொடுக்க வேண்டும்.

காகா கலேல்கார்.

## ஒரு நீக்ரோ முனிவர்

சென்ற நூறு வருஷ காலத்தில் விஞ்ஞானமானது மூக்கில் விரல் வைத்து அதிசயிக்கக் கூடிய அளவு முன்னேற்றமடைந்திருக்கிறது. ஆனால் முற்றிலும் நன்மை தருவதுதானா என்பதில் எல்லோருக்கும் சந்தேகமாகவே இருந்து வருகிறது. மனிதர்களிடையே காணப்படும் துன்பத்தை நீக்குவதற்காக அதை உபயோகிக்காமல் ஜனங்களைக் கெடுத்து வாழவும் நாசம் செய்யவுமே உபயோகித்து வருகிறார்கள். அதன்பயனாக பயங்கரமான யுத்தங்கள் நடைபெறுகின்றன.

ஆயினும் மேனாட்டிலுதித்த சிறந்த விஞ்ஞானிகளில் ஒரு சிலர் தங்கள் வாழ் நாள் முழுவதும் மனித ஜாதியின் க்ஷேமத்திற்காகவே உழைத்து வந்திருக்கிறார்கள். அத்தகைய முனிவர்களில் ஒருவர் தென் அமெரிக்காவில் இழிவாகக் கருதப்படும் நீக்ரோ ஜாதியைச் சேர்ந்தவர் ஆவார். அவர் விவசாயிகளுக்கு போதுமான உணவு கிடைப்பதற்காக விவசாயத்தை அபிவிருத்தி செய்வதிலேயே தம்முடைய வாழ் நாள் முழுவதையும் செலவு செய்தார். அமெரிக்கன் பிக்டோரியல் என்னும் பத்திரிகையில் அவருடைய சரிதம் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது அது வருமாறு:—

“ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் என்பவர் சாதாரண குடும்பத்தில் பிறந்து விவசாய விஞ்ஞானிகளில் தலைசிறந்தவராக ஆனவர். அவர் விவசாய விஷயத்தில் நூற்றுக்கணக்கான புது விஷயங்களைக் கண்டுபிடித்து உலகத்துக்கு உதவியிருக்கிறார்.

கார்வர் அமெரிக்காவின் தென் பாகத்திலுள்ள மிஸௌரி மாகாணத்தில் 1864-ம் வருஷத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் நீக்ரோ அடிமைகளாயிருந்தார்கள். அவர் ஆறு மாத சிசுவாயிருக்கும் பொழுதே பெற்றோர்களை இழந்துவிட்டார். அதனால் அவருக்கு அவர்களைத் தெரியாது. அடுத்த வருஷத்தில் அடிமைத்தனம் சர்க்காரால் ஒழிக்கப்பட்டது. மோஸஸ் கார்வர் அந்தச் சிசுவை எடுத்து வளர்த்தார். அவருடைய பெயரே அதற்கு இடப்பட்டது. வீட்டு வேலைகளைச் செய்வதற்காக வளர்க்க எண்ணினார் அந்த வெள்ளையர்.

ஆனால் பையனுக்கு படிப்பில் அளவு கடந்த ஆர்வம் உண்டாயிற்று. அதைக் கண்டு மூர்ஷ் வாட்கின்ஸ் என்னும் அம்மையார் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு உதவி செய்தார். கார்வர் துணி துவைத்து அந்த வருவாயைக்கொண்டு சாப்பிடவும் பாடசாலையில் படிக்கவும் செய்தார். ஹைஸ்கூல் படிப்பு முடிந்ததும் காலேஜில் படிப்பதற்கு வேண்டிய பணத்தை தேடுவதற்காக அயோவா நகரத்திற்குச் சென்று ஒரு சிறு சலவைச் சாலை அமைத்தார். வேறுசிறு வேலைகளையும் செய்து சிம்ஸன் கலாசாலையில் மூன்று வருஷ காலம் படித்தார். அதன் பின் அயோவா விவசாய கலாசாலையில் நான்கு வருஷங்கள் கல்வி கற்றார்.

1896-ம் வருஷத்தில் கார்வர் டஸ்கீகீ என்னுமிடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படடிருந்த கலாசாலையில் விவசாய ஆராய்ச்சி சாலையொன்று அமைத்தார். அதற்கு முதலில் வெறும் கட்டடம் தான் கிடைத்தது. ஆராய்சிக் கருவிகள் வாங்குவதற்கு வேண்டிய பணமில்லை. ஆயினும் மனம் தளராமல் குப்பைத் தொட்டிகளில் கிடக்கும் பழைய பாட்டில்கள் முதலியவைகளை எடுத்துக் கொண்டு வந்து சிறிது சிறிதாக தம்முடைய கருவிகளை அமைத்துக் கொண்டார்.

கார்வார் பல ஆராய்ச்சிகள் செய்து ஒரு ஏகர் பூமியில் ஒரு பேல் பருத்தி விளையும்படி செய்யக்கூடிய முறையைக் கண்டுபிடித்தார். இன்னும் பல தானிய வகைகளையும் கண்டு பிடித்தார். சீனிக்கிழங்கு வருஷத்தில் இரண்டு முறை பயிராக்கக் கூடிய விதத்தை விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுத்தார்.

அதன் பின் அவர் சீனிக் கிழங்கை ஆகாரமாக உபயோகிப்பதோடு அதைக் கொண்டு நூறு உபயோகமான பொருள்கள் செய்யக் கூடிய முறைகளைக் கண்டுபிடித்தார். அதன் பின் வெகு நாளாக உபயோக மில்லை என்று கருதப் பட்ட மொச்சைக் கொட்டையிலிருந்து காப்பி, பால், அச்சடிக்கும் மை, மருந்து நெய், கடுதாசி போன்ற முன்னூறு பொருள்கள் செய்யக் கூடிய விதத்தையும் கண்டு பிடித்தார். அந்த தேசத்திலுள்ள பைன் என்னும் மரத்தைக் கொண்டு கடுதாசி செய்யக் கற்றுக் கொடுத்தார்.

இப்பொழுது அந்த கைத்தொழில் அங்கே அபரிமிதமாக நடந்து கொண்டு வருகிறது. அவர் எதையும் உபயோக மற்றது என்று கருதுவதில்லை. மரம் அறுக்கும்பொழுது விழும் மரத் தூளைக் கொண்டு சலவைக் கல் செய்தார். சூரிய காந்திப் புஷ்பம், திராக்ஷைக் கொடி போன்ற வஸ்துக்களைக் கொண்டு கடுதாசி செய்தார். ஜனங்கள் தாங்கள் வாழும் இடத்தைச் சுற்றி நூறு கஜ வட்டாரத்திற்குள் உண்டாகும் பொருள்களைக் கொண்டு தங்கள் வாழ்வை நடத்திக் கொள்ள முடியும் என்று கூறினார். இதை நிரூபிப்பதற்காக ஜனங்கள் உபயோகப் படுத்தாத செடி கொடிகளைச் சேகரித்து அவைகளைக் கொண்டு பல ஆகார தினுசுகளை உண்டாக்கிக் காட்டினார். அந்த முறைகளைத் துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டு நாடெங்கும் இலவசமாக வழங்கினார்.

விவசாயிக்கு நன்மை செய்வதையே தம் வாழ்வின் லக்ஷயமாகக் கொண்டிருந்தார். விவசாயிகளுக்கு தம்முடைய முறைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக ஒரு பழைய வண்டியை வாங்கி அதை ஒரு நடமாடும் விவசாய பாடசாலையாகச் செய்தார். அதில் தம்முடைய காக்ஷிப் பொருள்களை ஏற்றி வைத்துக் கொண்டு ஒரு குதிரையை இரவலாகக் கேட்டு வாங்கி அதில் பூட்டி கிராமம் கிராம மாகச் சென்றார். ஒவ்வொரு கிராமத்திலும் போய் விவசாயிகளுக்குப் பிரசங்கங்கள் செய்தார். இப்பொழுது அமெரிக்க சர்க்கார் மோட்டார் வண்டிகள் வைத்து இந்த மாதிரி ஊரூராகச் செல்லும் பாடசாலைகளை நடத்தி வருகிறார்கள்.

கார்வருக்கு பிரியமான காரியம் ஒன்று உண்டு. கலை தான் அது. அவர் இயற்கைக் காக்ஷிகளை ஓவியமாகத் தீட்டுவார். அதில் புகழும் பெற்றார். அத்துடன் களிமண்ணிலிருந்து சாயங்கள் செய்வதையும் கண்டு பிடித்தார். விவசாயிகள் தங்கள் நிலத்திலுள்ள மண்ணைக்கொண்டே எப்படி பணச் செலவில்லாமல் தங்களுடைய வீடுகளுக்கு வர்ணம் பூசலாம் என்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். பருத்தி அரைக்கும் பொழுது விழுகிற கழிவுப் பஞ்சுகளைக் கொண்டு ஜமக்காளங்கள் கயறுகள் தளம் பாவுவதற்குள்ள கற்கள் செய்வதையும் கற்றுக்கொடுத்தார்.

மின்சார விளக்கு, சினிமா முதலிய பல அற்புதங்களைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானியாகிய தாமஸ் எடிஸன் என்பவர் தம்முடைய ஆராய்ச்சி சாலையில் கார்வாருக்கு ஒரு உத்தியோகம் தருவதாகச் சொன்னார். ஆனால் கார்வாருக்கு பணம் தேட வேண்டுமென்ற ஆசை கொஞ்சமும் கிடையாது அவருக்கு தம்முடைய மாகாணத்தை விட்டுவர பிரியமில்லை. அதனால் எடிசன் ஆராய்ச்சி சாலைக்கு வர மறுத்துவிட்டார். அவர் பணம் பெறுமலே எல்லோருக்கும் யோசனை சொல்லி உதவி செய்துவந்தார்.

கார்வார் முடக்கு வாதத்திற்கு உபயோகமாகக் கூடிய ஒரு மருந்து எண்ணெயைக் கண்டுபிடித்த பொழுது அதை சர்க்காரிடம் பதிவு செய்துகொண்டு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தி பணம் தேடுவதை விட்டுவிட்டு எல்லோருக்கும் தெரியும்படியாக பகிரங்கமாக விளம்பரம் செய்தார். பீக்கன் என்னும் மரங்களை வளர்த்துவந்த விவசாயிகள் தங்களுடைய மரங்களுக்கு ஒருவிதமான நோய் உண்டாவதைக் கண்டு அவருடைய உதவியை நாடினார்கள். அவர் நோயைப் போக்குவதற்கான மார்க்கத்தைச் சொல்லிக் கொடுத்தார். அதனால் அந்த விவசாயிகள் அவருக்கு ஒரு பணமுடிப்பளிக்க விரும்பினார்கள். ஆனால் அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

ஒருசமயம் சலவைக் கல் செய்யும் முறையை அடுத்த மாகாணத்திலுள்ள ஒரு தொழிற்சாலைக்கு இனமாக அளித்தார். ஆனால் அவர்களுக்கு அந்த முறையைக் கையாள முடியவில்லை. அதனால் அவர்கள் அவரைத் தங்களுடைய தொழிற்சாலைக்கு வரும்படி வேண்டிக் கொண்டார்கள். என்னுடைய ஊரை விட்டு வர மாட்டேனென்று மறுத்துவிட்டார். அதன் பின் அந்த தொழிற்சாலையார் அவர் இருந்த ஊருக்கு தங்கள் தொழிற்சாலையை மாற்றினார்கள். அவர் அவர்களுக்கு இனமாக யோசனை சொல்லி உதவி செய்தார்.

1939ம் வருஷத்தில் அவருக்கு அவருடைய விஞ்ஞானத்திறமைக்காக ரூஸ்வெல்ட் பதக்கம் பரிசளிக்கப் பட்டது. அவருக்கு அப்பொழுது வயது 65. மறு வருஷத்தில் அவர் தம்முடைய வாழ் நாள் முழுவதும் மிச்சப்படுத்தி வைத்திருந்த பணத்தைக் கொண்டு விவசாய ரசாயன ஆராய்ச்சி அபிவிருத்திக்காக தம்முடைய பெயரால் ஒரு ஆராய்ச்சிசாலை ஏற்படுத்தினார். மூன்று வருஷம் சென்றபின் இறந்தார்.

ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் விஞ்ஞானத் திறமைக்காக மட்டும் போற்றப்படவில்லை. அவர் எப்படி மனிதன் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் மனித சாதியின் க்ஷேமார்த்தமாக வாழ முடியுமென்பதை உலகத்திற்கு வாழ்ந்து காட்டினார். 1943-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் அமெரிக்க சர்க்கார் அவர் அடிமையாகப் பிறந்த மிஸௌரி மாகாணத்தில் ஞாபகார்த்தச் சின்னம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

எஸ். ஏ.

பிறிதொரு மதமெனப் பெண்மையைக் கெடுப்பதும் பேய் செய்யுமோ? —நாமக்கல் கவிஞர்.

தமிழ் ஹரிஜன்

டிசம்பர் 8 ஞாயிறு 1946

## செய் அல்லது செத்துப்போ

சத்தியாக்கிரகப் பாதையில் செல்லும்பொழுது இடையில் நிற்கவோ ஓய்வுகொள்ளவோ இடம் கிடையாது. முன்னேறிச் செல்லவேண்டுமே தவிர பின்னோக்கிப் போகவும் முடியாது. காந்தியடிகள் காஜிர்கிலில் தங்கியிருந்தபொழுது நான் ஒருநாள் அவசர வேலையின் நிமித்தம் தத்தபாராவிற்குப் போயிருந்தேன். அங்கிருந்து திரும்பியதும் அவர் சத்தியாக்கிரக பாதையில் மற்றுமொரு அடி முன்னால் எடுத்து வைத்துவிட்டார் என்பதைக் கண்டேன். வங்காள மந்திரி சபையார் அங்கீகரிக்கிற ஒரு நல்ல முஸ்லீம் லீகர் தம்மை அவருடைய குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொள்ள தயாராயிருந்தால் தாம் ஒரு முஸ்லிம் குடும்பத்தில் வசிக்க விரும்புவதாக காந்தியடிகள் கூறினர். 16ம் தேதி தம்மைப் பார்க்க வந்த மந்திரி காப்பரான் சாகிப்பிடம் இந்த விஷயத்தைக் கூறினர். ஏதேனும் நல்ல முஸ்லீம் லீகர் ஒருவரை சிபார்சு செய்யமுடியுமா என்று அவரிடம் கேட்டார். தம்முடைய தோழர்கள் எல்லோரையும் விட்டு விட்டுத் தனியாகத் தம்மை கவனித்துக்கொள்ளத் தெரியாதவர்களுடைய இடையிலே காந்தியடிகள் வசிக்க விரும்பியதைக் கேட்டதும் மந்திரி திடுக்கிட்டு விட்டார்.

காந்தியடிகள்:—நான் என்னைக் கவனித்துக் கொள்ள முடியும். எனக்குப் பிறர் உதவி தேவையில்லை.

மந்திரி:—"அப்படியானால் தங்களை எந்த முஸ்லிம் குடும்பத்தாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்று சிரித்துக்கொண்டு சொன்னர்.

ஆனல் காந்தியடிகளை அவ்வளவு எளிதாகத் தட்டிக் கழித்துவிட முடியாது. அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அந்த விஷயத்தைப் பற்றி விவரமாகப் பேசினர்.

அவர் கூறியதாவது:—"நான் நோவகாளியில் முஸ்லிம்கள் மத்தியில் வசித்து வருகிறேன். ஹிந்து நண்பர்களோடு தங்கி இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. முஸ்லிம்லீகைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரோடு தங்க விரும்புகிறேன். என்னுடைய தேவைகள் மிகவும் சொற்பம். எனக்கு வேண்டியதெல்லாம் சுத்தமும் சுத்தமான ஜலமும் எனக்கும் பிடித்தமான உணவும் என் பிரியம்போல் கடவுளைத் தொழும் உரிமையும்தான். நான் முஸ்லிம்லீகை சேர்ந்த நண்பருடன் தங்குவதை ஹிந்துக்கள் கண்டால் அவர்கள் நம்பிக்கை வந்து தங்கள் வீடுகளுக்கு தைரியமாகத் திரும்புவார்கள். முஸ்லிம்களும் நான் அவர்களுடைய நண்பனா பகைவனா என்பதை அறிந்துகொள்வதற்கு வேண்டிய சந்தர்ப்பத்தையும் பெறுவார்கள்.

ஆயினும் முஸ்லிம் ஒருவர் என்னை ஏற்றுக்கொள்ளும் வரை நான் சும்மா இருக்க உத்தேசிக்கவில்லை. நான் ஆகாகான் மாளிகையில் சிறைப்பட்டிருந்த பொழுது ஒரு நாள், அஹிம்சா ரீதியாக இந்தியாவைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுத ஆரம்பித்தேன். ஆனல் கொஞ்சம் எழுதிய பிற்பாடு அதற்குமேல் எழுத முடியவில்லை. ஹிந்து மதத்தில் இரண்டு அம்சங்கள் உள. சாதாரணமாக அனுஷ்டானத்திலிருந்து வரும் ஹிந்து மதம் ஒன்று. அதில் தீண்டாமை விக்கிரக ஆராதனை மிருக பலி போன்றவைகள் காணப்படுகின்றன. கீதை உபநிஷத், பதஞ்சலியோக சூத்திரம் கூறும் ஹிந்து மதம் ஒன்று. அது அஹிம்சா தர்மத்தையும் சகல ஜீவராசிகளும் ஒன்று என்பதையும் அழியாத அருவமான அந்தரியாமியான கடவுளைத் தொழும் மார்க்கத்தையும் போதிக்கின்றது. அஹிம்ஸா தர்மந்தான் ஹிந்து மதத்தின் சிகரம் என்பது எனது அபிப்பிராயம். ஆனல் நம்முடைய ஜனங்கள் சந்நியாஸிகளுக்கு மட்டுமே ஏற்றது என்று கூறி அதை அனுஷ்டியாமலிருந்து வருகிறார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அதுதான் மனிதன் வாழ வேண்டிய முறை என்பதும் அதை இந்தியா உலகத்துக்குக் காட்டவேண்டு மென்பதும் என் திடமான நம்பிக்கை. ஆனல் அத்தகைய அஹிம்ஸை என்னிடம் காணப்படுகின்றதா? காணப்படுமானல் நஞ்சு மாதிரி இங்குள்ள நிலைமையை நாசமாக்கிவரும் பொய்யும் ஏமாற்றும் பகைமையும் ஒழிந்துபோகும். அதைப் பரிசோதிப்பதற்காக நான் எனக்கு உதவி செய்துவரும் தோழர்களை விட்டுப் பிரிந்து தனித்து வாழ விரும்புகின்றேன்."

அதன் பிறகு காந்தியடிகள் சேவா கிராமத்திலுள்ளவர்களுக்கு கீழ்கண்டவாறு எழுதினர்:—

"நான் சேவாக்கிராமத்திற்கு திரும்பி வருவேனோ வரமாட்டேனோ என்பது தெரியாது. திரும்புவதாயிருந்தாலும் இப்பொழுதில்லை என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். என்னுடன் வந்திருக்கும் தோழர்களின் விஷயமும் அதுவேதான். எங்கள் முன்னால் உள்ள சோதனை பிரமாண்டமானதாகும். கடவுள் என்னைச் சோதித்துக் கொண்டிருக்கிறார். நான் கூறும் அஹிம்ஸை பலவீனர்களுடைய ஆயுதமா? அல்லது உண்மையிலேயே பலவான்களுடைய ஆயுதந்தானா? பலவான்களுடைய ஆயுதமாகச் செய்ய விரும்புகின்றேன். அந்த முயற்சியில் என்னுடைய உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். அந்த லக்ஷயத்தைத் தேடி, குட்டிச் சுவராக ஆக்கப்பட்டுள்ள இந்தக் கிராமத்தில் தனியாக வசிக்க வந்திருக்கிறேன். கடவுள் சித்தப்படி நடக்கட்டும்."

கொலம்பஸ் எப்படி புதிய தேசத்தை கண்டுபிடிப்பதற்காக முன்பின் அறியாத திசையை நோக்கிக் கடலில் சென்றாரோ அதுபோல் காந்தியடிகளும் தமது லக்ஷயத்தைத் தேடி 20 தேதி அன்று நாஸிர்கில் என்னும் ஊரிலுள்ள தம்முடைய முகாமைக் கலைத்தார். அவர் தம்முடைய சுருக்கெழுத்து உதவியாளர் திரு. பரசுராமையும் வங்காளி மொழி பெயர்ப்பாளர் ஆசிரியர் நிர்மல்குமார் போஸையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ ராம்பூருக்குப் போவதற்கு முன் ஒரு சிறு பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினர். அப்பொழுது அவருக்குப் பிரியமான வைஷ்ணவ ஜனதோ என்னும் கீதம் பாடப்பட்டது. பலருடைய தொண்டைகள் கம்மி விட்டன. பலருடைய கண்கள் கண்ணீரால் இருண்டு விட்டன. எல்லோரும் அவர் ஏறி இருந்த சிறு தோணிமறையும் வரை ஒன்றும் தோன்றாது பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

அவர் போனபிறகு அவருடைய பரிவாரத்தாரும் ஒவ்வொருவராக தத்தமக்கு குறிப்பிட்டக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஸ்ரீராம்பூரில் தங்கி இருக்கும் குடிசை கமுகஞ் சோலைக்கும் தென்னஞ் சோலைக்கும் இடையில் இருக்கிறது. ஆனல் நாலா பக்கங்களிலும் தீ வைத்து நாசம் செய்த பயங்கரக் காக்ஷியே காணப்படுகிறது. காந்தியடிகள் சூடான ஜலத்தில் தினந்தோறும் உட்கார்ந்திருப்பது வழக்கம். அதை இப்போது விட்டு விட்டார். முதல் இரண்டு நாட்களில் தாமே தம் உடம்பைப் பிடித்து விட்டுக் கொண்டார். அங்கு போன பிற்பாடு பிரதம மந்திரியுடனும் மற்றவர்களுடனும்

**வளர்ச்சி என்பது யாது? ஜனங்களுக்கு உண்மையைக் கூறுவதுதான். —தாதாபாய் நௌரோஜி.**

பலமுறை பேசினர். ராம்கஞ்சில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் பிரதிநிதிகள் முப்பது பேர்களுடனும் கலந்து பேசினர். அதன் பயனாக சமூக ஒற்றுமையும் சமாதானமும் ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். மந்திரிகள் அதை நடத்தி வைப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் நவம்பர் 23ம் தேதி சந்துபூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் காந்தியடிகள் கூறியதாவது:- “ஜனப் பிரதிநிதிகளாயிருந்து சர்க்காரை நடத்தும் முஸ்லிம்கள் உங்களுக்கு உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். இத்தகைய அவமானகரமான காரியங்கள் மறுபடியும் நடக்க ஆரம்பித்தால் அவர்கள் சும்மாயிருக்கப் போவதில்லை. ஹிந்துக்கள் அவருடைய உறுதி மொழிகளை நம்ப வேண்டுமென்று யோசனை கூறுகிறேன். இப்படிச் சொல்வதைக் கொண்டு கிழக்கு வங்காளத்தில் கெட்ட முஸ்லிம் ஒருவர்கூட கிடையாது என்று சொல்வதாக எண்ண வேண்டாம். எல்லா சமூகங்களிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் உண்டு. தவறாக நடந்தால் எந்த மந்திரி சபையும் ஸ்தாபனமும் அழிந்து போகும்.

உண்மையான சமாதானம் ஏற்பட வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் பரஸ்பரம் நம்பிக்கை கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது. நோவகாளியில் நடந்த அட்டூழியங்களுக்கு பீஹார் பழி வாங்கிவிட்டதாக ஜனங்கள் கூறிக்கொள்ளுகிறார்கள். கிழக்கு வங்காளத்திலுள்ள முஸ்லிம்களோ, இந்தியா முழுவதிலுமுள்ள முஸ்லிம்களோ பீஹாரில் நடந்த அட்டூழியங்களுக்காக பழி வாங்கத் தீர்மானித்து விடுவார்களானால் இந்தியா என்னவாகும்? என் யோசனைப்படி நடந்தால் உங்களுக்கு ஏற்படக்கூடியபெரிய நஷ்டம் உயிரிழப்பது ஒன்றுதான். உயிரிழப்பதையும் நீங்கள் ஆண்களும் பெண்களும் வீரர்களாகவே உயிரிழக்க வேண்டும்.

பிரதம மந்திரியும் அவருடைய தோழர்களும் உறுதி மொழிப்படி நடக்காமற் போவார்களேயானால் நீங்கள் அதை அறிந்துகொள்வீர்கள். ஆனால் நான் அதைப்பார்த்துக்கொண்டு உயிர்வாழப் போவதில்லை”

ஸ்ரீராம்பூர் — 24-11-46 — பியாரேலால்

## அன்னையின் துயரம்

ஒரு காலத்தில் தெய்வபக்தி நிறைந்த ஒரு தாயார் தினந்தோறும் கிராமத்திலுள்ள கோவில்கள் எல்லாவற்றிற்கும் சென்று மிகுந்த பயபக்தியுடன் கடவுளைத் தொழுது வந்தார். ஹிந்து கோவில்களுக்கு மட்டுமின்றி கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் முஸ்லிம மசூதிகளுக்கும் சென்று வந்தார்.

வீட்டில் பலவிதமான உருவங்களுடைய கற்கள் பொம்மைகள் முதலியன வைத்திருந்தார். அவைகளை தெய்வங்களாக வணங்கிவந்தார். அவர் தாம் கேள்விப்பட்டிருந்த சகல தெய்வங்களையும் வணங்கி வந்த போதிலும் இந்த தெய்வங்களுக்கெல்லாம் மேலாக ஒரே ஒரு பரம்பொருள் இருக்கின்றது என்பதையும் அந்தப் பரம்பொருள் அன்புமயமானது என்பதையும் இன்னவிதமென்று சொல்லமுடியாத முறையில் உணர்ந்திருந்தார்.

அவருடைய எண்ணங்களும், கற்பனைகளும் தெளிவாக இல்லாமலிருந்தன. அவைகளை வார்த்தைகளின் மூலம் வெளியிடுவதற்கு வேண்டிய திறமையும் அவருக்கில்லை. ஆயினும் கஷ்டங்களை அனுபவிப்பதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், ஒழுக்கத்திலிருந்து பிறழாமலிருப்பதற்கும் தேவையான தெய்வ நம்பிக்கையும் அன்பும் ஆற்றலும் உடையவராயிருந்தார்.

அவருக்கு பல குழந்தைகளும் பேரன்மாரும் இருந்தனர். அவர் தெய்வபக்தியுடனும் அன்புடனும் அவர்களை எல்லாம் வளர்த்திருந்தார். அவர்களில் சிலர் அன்னையைப் போலவே தெய்வ நம்பிக்கையுடையவராக இருந்தபோதிலும் கல்வியுடையவராகவும் பலவிதமான கோயில்களின் தலைவர்களுடனும் பல மதங்களைச் சேர்ந்த பண்டிதர்களுடனும் தொடர்புடையவர்களாகவும் இருந்தார்கள். ஆதலால் அவர்களில் சிலர் தங்களை சைவர்கள் என்றும், சிலர் வைஷ்ணவர்கள் என்றும் சிலர் ஜைனர்கள் என்றும் சொல்லிக்கொண்டார்கள். சிலர் ஒரு கடவுளை வணங்கினார்கள். சிலர் மும்மூர்த்திகளை வணங்கினார்கள். சிலர் அநேக தெய்வங்களை வணங்கினார்கள். சிலர் கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாயும் சிலர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களாயும் இருந்தார்கள். சிலர் விக்ரக ஆராதனையில் நம்பிக்கையுடையவர்களாயும் சிலர் நம்பிக்கை இல்லாதவர்களாயும் இருந்தார்கள். இன்னும் சிலர் கடவுள் இல்லை என்றும் உலகம் அனைத்தும் ஒரு ஏக ஜடப்பொருளிலிருந்தே உற்பத்தியாயிருக்கின்றன என்றும் சொன்னார்கள். ஆயினும் அவர்களும் மதப்பற்றுடையவர்களாகவே இருந்தார்கள். சிலர் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக மதப்பற்றுடையவர்களாக ஆனார்களோ அவ்வளவுக் கவ்வளவு சமூக விஷயங்களில் மதப்பற்று குறைந்தவர்களாயிருந்தார்கள். மதப்பற்று அதிகமாயிருந்தவர்கள் தங்களுடைய கொள்கைகளைப் பற்றியும் வழிபாட்டு முறைகளைப் பற்றியும் சன்மார்க்க வாழ்வைப்பற்றியும் அடிக்கடி விவாதித்து வந்தார்கள. சில சமயங்களில் வாதம் முற்றி அடிதடியும் நடக்கும். எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக அவர்கள் தங்களுடைய கொள்கையே உண்மையானது என்றும் சரியானது என்றும் நம்பினார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் தங்களுடன் பிறந்து வேறு கொள்கைகளுடைய சகோதர சகோதரிகளை சரியான விதத்தில் நடத்தாமலிருந்தார்கள். ஒவ்வொருவரும் தாயாரையும் அவருடைய மற்றக் குழந்தைகளையும் தம்முடைய மதத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய முயற்சி செய்துவந்தார். ஆனால் கள்ளங் கபடற்ற தாயார் “மகனே எனக்கு வயதாகிவிட்டது, நான் படித்தவளுமல்ல. என்னிஷ்டம்போல் அனுஷ்டிக்க விட்டுவிடு, நீங்களும் ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படியே அனுஷ்டித்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒன்றுமட்டும் மறந்து விடாதீர்கள். நீங்கள் ஒழுக்கம் தவறாமலும் சகோதர சகோதரிகளிடம் அன்பு குறையாமலும் நடந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் பிறர் கொள்கைகளை பழிக்கவேண்டாம். இந்த விதமாக நடந்து கொண்டால் உங்களுக்கு எவ்வித குறைவும் உண்டாக மாட்டாது” என்று கூறினர்.

ஆனால் காலக்கிரமத்தில் அவர்கள் மதப்பற்றின் மிகுதியால் ஏற்படும் வெறியின் காரணமாக பரஸ்பரம் தங்களிடையேயுள்ள உறவை மறந்து அன்னியர்களைப் போலவும் பகைவரைப் போலவும் நடக்க ஆரம்பித்தார்கள். முதலில் அடிதடியில் ஆரம்பித்து இறுதியில் கொலையில்வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொருவரும் தம்முடைய கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களைக் கரு அறுத்துவிட ஆரம்பித்தார்கள்.

யாரேனும் ஒருவர் பிறர்க்கு கேடு சூழ்ந்துவிட்டால் உடனே அவர் தாயாரிடம் வந்து தாம் ரத்த பாசத்தை மறந்து தம்முடைய கொள்கையை நிலைநாட்டுவதற்காக அவருடைய குழந்தைகளை அழித்துவிடுவதாகப் பெருமை பேசிக்கொள்வார். அதைக் கேட்டுத் தாயார் அவருடைய பக்திக்காக அவரை பாராட்டுவாரென்று எதிர்பார்த்தார். ஆனால் தாயாரோ தம்முடைய அருமைக் குழந்தைகளை இழந்து விட்டதற்காக அழுது புலம்புவார். அந்தக் கேடு சூழ்ந்தவரை, அநியாயமாக இரக்கமில்லாமல் மனிதத்தன்மையின்றி இப்படிச் செய்துவிட்டாயே என்று கண்டிப்பார்.

இப்படி தாயார் வருத்தப் படுவதையும் கண்டிப்பதையும் பார்த்ததும் கேடு சூழப் பெற்ற குழந்தைகள் கேடு சூழ வருவோருடைய குடும்பத்தாருக்கெல்லாம் பழிவாங்க கேடு செய்தால் தாயார் கோபித்துக் கொள்ள மாட்டார் என்று எண்ணி பழிவாங்கப் புறப்படுவார்கள். பழிவாங்கி விட்டு அதைப் போய் அன்னையிடம் மிகுந்த சந்தோஷத்துடன் கூறுவார்கள். தாயார் அதைக்கேட்டு சந்தோஷ மடைவார்கள் என்று எண்ணுவார்கள்.

ஆனால் தாயாரோ மறுபடியும் அழுது புலம்பவும் பழிவாங்கிய குழந்தைகளைக் கண்டிக்கவுமே செய்தார். ஏனெனில் அவர் எல்லாக் குழந்தைகளுக்கும் அன்னையாக இருந்த படியால் எந்தக் குழந்தையை இழக்கவும் மனமில்லை. ஆழ்ந்த வேதனை அடைந்தார். அதன் மேல் என்னுடைய மனச் சாந்தியை இப்படி என் குழந்தைகள் கெடுத்து விட்டார்களே இறைவனே நீரே கதி என்று பிரார்த்திக்கவும் உண்ணுவிரத மிருக்கவும் ஆரம்பித்தார். இந்த மாதிரி அம்மையார் வருந்தியதிலும் நடந்து கொண்டதிலும் ஆச்சரியப்படும் படியாக ஏதேனுமுண்டா?

நாம் காங்கிரஸ் காரர்களாயிருந்து தேசீயத்தைப் பற்றி பேசிவந்த போதிலும் மனத்தில் வகுப்பு உணர்ச்சி உடையவர்களா யிருந்தால் சமூக அட்டூழியங்கள் நடக்கும்பொழுது நம்முடைய சமூகம் செய்யும்பொழுது சந்தோஷமும் பிறர் சமூகம் செய்யும்பொழுது வருத்தமும் அடைவோம். ஆனால் நம் எல்லோருக்கும் பொதுத் தாயாக உள்ள பாரதமாதா நம்முடைய சந்தோஷத்தையும் வருத்தத்தையும் நம்முடைய தற் பெருமையையும் வகுப்புவாத கோஷங்களையும் கண்டு அளவற்ற துன்ப மடைவார். அதை நாம் மறந்து விடுகிறோம். அவருடைய கண்களைப் பாருங்கள். கண்ணீரும் கம்பலையு மாயிருக்கிறார். தாங்க முடியாத மன வேதனை காணப்படுகிறது.

பாரதமாதாவை மனக் கண்ணால் பார்க்க முடியாவிட்டால் காந்தியடிகளுடைய கண்களையும் ஹிருதயத்தையும் நோக்குங்கள். அப்பொழுது அன்னையின் துயரத்தை அறிந்து கொள்வீர்கள்.

வாமி. — 24-11-46 — கே. ஜி. எம்.

## வாரக்கடிதம்

### அஞ்சாமை

ஹிந்து ஊழியர்கள் காந்தியடிகளை சாந்த்பூர் என்னும் கிராமத்தில் பேட்டிகண்ட பொழுது அவர் அவர்களுக்கு அஞ்சாமையாகிய பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். அதன்பின் அதே பாடத்தை செளமுகானி முதலிய பல இடங்களிலும் வற்புறுத்திக் கூறினார். இப்பொழுது அதுதான் அவருடைய பிரசங்கங்களின் ஜீவ நாடியாக இருந்து வருகிறது. அவர் தம்மை செளமுகானியில் பார்க்க வந்த நண்பர் ஒருவரிடம் கூறியதாவது :—

" முஸ்லிம்கள் இத்தனைபேர் வெறிகொள்ள ஆரம்பித்து விட்டார்கள் என்பதன்று நாம் வருத்தப் படவேண்டிய விஷயம். கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்கள் இத்தனைபேர் முஸ்லிம்களுடைய அட்டூழியங்களுக்கு அடி பணிந்திருந்ததுதான் வருந்த வேண்டிய விஷயமாகும். கிழக்கு வங்காளத்திலுள்ள ஹிந்துக்கள் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் கொல்லப் பட்டிருந்தாலும் நான் வருத்தப் பட்டிருக்கமாட்டேன். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ரஜ புத்திரர்கள் எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? அவர்கள் போர்க் களத்தில் பிராணத்தியாகம் செய்யப் புறப்படுமுன் தங்கள் பெண்களைக் கொன்று விடுவார்கள். யாரேனும் பெண்கள் உயிரோடு இருந்தால் அவர்கள் தோல்வி ஏற்படுவதைக் கண்டதும் மான பங்கம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு தீயில் குதித்து தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்வார்கள். ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் தங்களிடையே வாழ்ந்துவரும் ஒரு சில ஹிந்துக்களைக் கொல்வது என்பது எந்த விதத்திலும் மனோதைரியமான செயலாகாது. ஆனால் ஹிந்துக்கள் தங்கள் பெண்களை கடத்திச் செல்வதையும் கற்பழிப்பதையும் பலாத்காரமாக முஸ்லிம் களாக்குவதையும் பலாத்காரமாக மணம் செய்து கொள்வதையும் தடுக்காமல் கோழைகளாக இருந்து தங்கள் ஹிந்து குலத்திற்கு இழிவு தேடிவிட்ட விஷயமானது ஹிருதயத்தைப் பிளக்கக் கூடியதாயிருக்கிறது."

அப்பொழுது நண்பர் கேட்டார்:—"ஹிந்துக்களுடைய மனத்தில் நம்பிக்கை உண்டாக்குவதெப்படி ?"

அதற்கு காந்தி யடிகள்:— "தைரியமாக உயிர் துறப்பதற்கு கற்றுக் கொள்வதின் மூலமாகத்தான். நம்முடைய கோபத்தை எல்லாம் நாம் நம்மீதே செலுத்த வேண்டும். போலீசுக்குப் பதிலாக இராணுவத்தை ஏற்படுத்துவதையோ முஸ்லிம் போலீசுக்குப் பதிலாக ஹிந்து போலீஸ் ஏற்படுத்துவதையோ, நான் விரும்ப வில்லை. நம்மைக் காக்கக் கூடிய பலம் அவைகளுக்குக் கிடையா."

நண்பர் :—அப்படியானல் காங்கிரஸ், லீக், பிரிட்டிஷ் சர்க்கார் இவர்களில் யாருடைய உதவியை நாம் நாட வேண்டும்?

காந்தியடிகள் :-இவர்களில் யாருடைய உதவியையும் நாம் நாடக் கூடாது. நம்மை நம்பியேதான் வாழ வேண்டும். அதாவது கடவுளையேதான் நம்பவேண்டும்

நண்பர் :-ஆனல் நாம் மனிதர்கள்தானே, உதவியின்றி வாழ முடியுமா ?

காந்தியடிகள் :—அப்படியானல் உங்களுடைய ஜனங்களையே நம்பி வாழுங்கள். அவர்களைப் புடம் போட்டு சுத்தம் செய்யுங்கள்.

### அச்சத்தின் காரணம்

18-ம் தேதி திங்கள் கிழமை மாலை காஜிர்கில் என்னுமிடத்தில் நடந்த பிரார்த்தனை கூட்டத்தில் காந்தியடிகள் எழுதிக் கொடுத்த கீழ்க்கண்ட செய்தி வாசிக்கப்பட்டது. அவர் கூறியதாவது:—

" நான் இந்தப் பகுதிகளில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக சுற்றுப் பிரயாணம் செய்தேனே அவ்வளவுக் கவ்வளவு அதிக தெளிவாக உங்களுடைய பெரிய பகைவன் அச்சந்தான் என்பதைக் கண்டு கொண்டேன். அது தான் பயப்படுத்து கிறவர்களையும் பயப்படுகிறவர்களையும் அரித்துக் கொண்டிருக்கிறது. பயப்படுத்துகிறவர்கள் பயப்படுகிறவர்களுடைய மதத்தையோ பணத்தையோ கண்டு அஞ்சுகிறார்கள். பணத்தைக் கண்டு அஞ்சும் பயத்தைத்தான் பேராசை என்று சொல்லுகிறோம். நீங்கள் விஷயத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் பேராசை என்பதும் ஒருவித பயந்தான் என்பதை அறிந்து கொள்வீர்கள். ஆனால் எவன் தன்னுடைய ஹிருதயத்திலிருந்து பயத்தை ஒழித்து விட்டானே அவனை யாரும் பயப்படுத்த முடியாது. அஞ்சாத வீரர்களை ஏன் பயப்படுத்த முடியாது? அஞ்சாதவர்களிடம் கடவுள் எப்பொழுதும் இருந்து கொண்டிருப்பதுதான் காரணம். ஆதலால் நாம் கடவுள் ஒருவருக்குத்தான் பயப்படவேண்டும். அவருடைய உதவியைத்தான் நம்பியிருக்க வேண்டும். அப்படி நடந்து கொண்டால் மற்ற பயங்களெல்லாம் தாமாகவே மறைந்து போகும். ஜனங்கள் அஞ்சாமையை அபிவிருத்தி செய்து கொண்டாலன்றி இந்தப் பகுதிகளில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எந்த விதமான சாந்தியும் சமாதானமும் உண்டாகப் போவதில்லை. "

கள்ளும் கஞ்சாவுமே சாத்தானுடைய கைகள். —காந்திஜி.

**உண்மையான பேச்சு.**

16.ம் தேதி மாலையில் வங்காள சிவில் சப்ளை மந்திரி காப்ரான் சாஹிபும் விவசாய மந்திரி அகமத் உசேன் சாயபும் தங்களுடைய பார்லிமெண்டரி காரியதரிசிகளுடனும் முஸ்லிம் லீக் நண்பர்களுடனும் காந்தியடிகளிடம் வந்து அகதிகளுக்கு சர்க்கார் செய்ய எண்ணும் உதவிகளைக் குறித்து பேசினர்கள். காப்ரான் சாகிப் நோவகாளி ஜில்லாவைச் சேர்ந்தவர். மந்திரியாவதற்காகு முன் பப்ளிக்பிராஸிக் கூட்டராக இருந்தவர். அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கீழ்க்கண்டவாறு பேசினர்:—

"இந்த ஜில்லாவில் நடந்துள்ள சம்பவங்களைக் குறித்து நான் மிகுந்த வருத்த மடைகின்றேன். என்னைப் போலவே கிழக்கு வங்காளத்திலுள்ள முஸ்லீம்கள் வருத்தப் படுகிருர்கள். நான் 16-தேதி முதல் இந்தப் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறேன். கிழக்கு வங்காளத்தில் அட்டூழியங்கள் நடந்திருக்கின்றன என்பதில் சந்தேக மில்லை. அவைகள் பத்தாம் தேதிக்கும் 16.ம் தேதிக்கும் இடையில் நடந்திருக்கின்றன. அட்டூழியங்கள் செய்தவர்களை தண்டிக்க வேண்டுமென்று நான் ஆத்திரப்படுகின்றேன். ஆனல் நான் நிரபராதிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று விரும்ப வில்லை. பீஹார், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் அந்த மாகாணங்களை விட்டு வேறு இடங்களுக்கு குடியேறுவதை எப்படி காங்கிரஸ் விரும்பவில்லையோ அப்படியே ஹிந்துக்கள் கிழக்கு வங்காளத்தை விட்டு வெளியேறுவதை வங்காள சர்க்காரும் முஸ்லிம் லீகும் விரும்ப வில்லை என்று நான் கிழக்கு வங்காளத்திலுள்ள ஹிந்துக்களுக்கு உறுதி கூறுகிறேன்.

ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பாரபட்சமின்றி நடத்தக்கூடிய அரசாங்கத்தை நடத்தத் தெரியுமென்று நிரூபிக்க விரும்புகிறது முஸ்லீம் லீக். நீங்கள் கிழக்கு வங்காளத்தில் பிறந்து வளர்ந்தீர்கள். இப்பொழுது அதைவிட்டு வெளியேற உங்களுக்கு எப்படி மனம் வரும்? ஹிந்துக்களும் முஸ்லிம்களும் எப்பொழுதும் நண்பர்களாகவே வாழ்ந்து வந்திருக்கிருர்கள். ஹிந்துக்கள் என்னை அண்ணு என்றும் மாமா என்றும் அழைக்கிருர்கள். அப்படியிருக்க இப்பொழுது இருவரிடமும் ஏன் பகைமை உண்டாக வேண்டும்? உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதும் போலீசையும் இராணுவத்தையும் அனுப்பிவிடுவோம். அவர்களிடத்தில் ஹிந்துக்களுக்கும் நம்பிக்கை யில்லை. முஸ்லிம்களுக்கும் நம்பிக்கை யில்லை. ஹிந்துக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி வரவேண்டுமென்று முஸ்லிம்கள் அவர்களிடம் மன்ருடிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்."

இப்படி அவர் பேசி வரும்பொழுது முஸ்லிம்கள் மாலை நமாஸ் தொழும் நேரம் வந்துவிட்டபடியால் கூட்டத்திலிருந்த முஸ்லிம்கள் கூட்டத்திற்கு வெளியே சென்று நமாஸ் தொழுகையை நடத்தினர்கள். அதன்பின் மந்திரி காப்ரான் சாகிப் மறுபடியும் சில நிமிஷநேரம் பேசினர். காந்தியடிகளுடைய கூட்டத்திற்கு வரும்பொழுதும் கூட்டத்திலும் கூட்டத்திலிருந்து திரும்பிப் போகும்பொழுதும் யாரையும் கைதி செய்யக்கூடாது என்று சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாக அவர் சபையோர்க்கு அறிவித்துக் கொண்டார்.

அதன்பின் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு பேசினர்:—

"நீங்கள் இப்பொழுது காப்ரான் சாகிப் கூறியதைக் கேட்டீர்கள். இதுபோலவே பிரதம மந்திரி ஷம்சுதீன் சாஹேபுவும் சில தினங்களுக்கு முன் சௌமொகானியில் நடந்த கூட்டத்தில் கூறினர். ஆகவே நீங்கள் எல்லோரும் நண்பர்களாக வாழவேண்டுமென்றே மந்திரிகள் விரும்புகிருர்கள். போலீசும் ராணுவமும் உங்களைக் காப்பாற்றிவிட முடியாது. கடவுள் ஒருவர்தான் உங்களைக் காப்பாற்ற முடியும். ஆதலால் நீங்கள் ஒருவரை ஒருவர் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஹிந்துக்க கிழக்கு வங்காளத்தைவிட்டு வெளியேறுவதை சர்கார் விரும்பவில்லை என்று காப்ரான் சாகிப் கூறியதைக் கேட்டீர்கள். பயங்கரமான காரியங்கள் நடந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனல் நீங்கள் அவைகளை மறந்துவிட வேண்டும். நீங்கள் இனிமேல் நண்பர்களாக வாழ வேண்டும். நீங்கள் தாங்க முடியாத கஷ்டத்தை அனுபவித்து விட்டீர்கள். அதனல் உங்களுடைய மனதில் சந்தேகம் நிறைவது சகஜம்தான். ஆனல் அப்படி சந்தேகம் உண்டாக இடம் தரலாகாது."

அப்பொழுது கூட்டத்திலிருந்த நண்பர் ஒருவர் காப்ரான் சாகிப் கூறியதில் பல பிழைகள் இருப்பதாகவும் அவற்றைக் குறித்து தாம் ஐந்து நிமிஷ நேரம் பேச அனுமதி கோருவதாகவும் காந்தியடிகளிடம் தெரிவித்தார்.

அதற்கு காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு கூறினர்:—

"இந்த நண்பருக்கு பேச அனுமதி அளித்தால் பலர் விவாதம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அது எனக்குப் பிரியமில்லை. இங்கே கூறுவதெல்லாம் நல்லெண்ணத்துடனேயே கூறப்படுகின்றன. ஆனல் பேச விரும்பும் நண்பர் மனத்தை புண்படுத்தாத முறையில் கடிதம் எழுதினல் நான் அதை சந்தோஷமாக காப்ரான் சாகிபுக்கு அனுப்புவேன். முஸ்லிம்கள் நமாஸ் தொழும்பொழுது நிசப்தமாக இல்லாதிருந்தது குறித்து எனக்கு வருத்தமா யிருக்கிறது. பிறர் தொழும்பொழுது சப்தம் செய்யாமலிருப்பதுதான் உயர்ந்த பண்பாடாகும். இருவகுப்பாரும் பரஸ்பரம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் எல்லோரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிருேம். பிரார்த்தனை நடக்கும் இந்த இடத்தில் காங்கிரஸ் கொடியும், லீக் கொடியும் பறப்பதைக் காண எனக்குச் சந்தோஷமா யிருக்கிறது. இரண்டு கொடிகளும் பொருள் செறிவு உடையவை. நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொண்டிருந்தால் தேசம் அடிமையாகவேதான் இருந்து வருமென்றும் பாகிஸ்தான் லக்ஷியம் கைகூடாதென்றும் காய்தே ஆஜாம் ஜின்ன சாகிப் கூறியதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். என்னை பயமுறுத்தி கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. முஸ்லிம்களை நசுக்குவதற்காக நான் வந்திருப்பதாக சில முஸ்லிம்கள் எண்ணுகிருர்கள். ஆனல் நான் என் வாழ்நாளில் யாரையும் கெடுத்ததில்லை என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். நீங்கள் ஏன் பீஹாருக்குச் செல்லவில்லை என்று சிலர் என்னிடம் கேட்கிருர்கள்.

பீஹாரில் கலக வெறி நிற்கா விட்டால் உண்ணவிரதம் இருக்கத் தீர்மானித்திருப்பதாக கூறி இருப்பதை அறிவீர்கள். நான் பீகாருடன் இடையருத தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் அங்கே வரவேண்டிய அவசியமில்லை என்று பண்டித ஜவஹர்லால் நேருவும் டாக்டர் ராஜேந்திர பிரஸாதும் மற்றவர்களும் எனக்கு உறுதி கூறி இருக்கிருர்கள். பீஹாரில் இப்பொழுது அமைதி நிலவ ஆரம்பித்திருப்பதாகத்தெரிகிறது. நிலைமை பூர்ணமாகத் திருந்தாவிட்டாலும் திருந்திக்கொண்டுதான் இருக்கிறது முஸ்லிம்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிருர்கள். வீடு இல்லாதபடி செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் வீடுகட்டிக்கொடுக்கும் பொறுப்பை பீஹார் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. வங்காளத்தில் நடந்த சம்பவங்களுக்காக ஏன் முஸ்லிம்களுக்கு விரோதமாக உண்ணு விரதம் இருக்கவில்லை

***தொண்டு செய்யக் கற்றவன் துயரம் போக்க உற்றவன். —நாமக்கல் கவிஞர்.***

என்று ஹிந்துக்கள் பலர் கோபமாக தந்தி அனுப்பி இருக்கிறார்கள். இப்பொழுது நான் அப்படிச் செய்ய முடியாது. முஸ்லிம்கள் என்னைத் தங்களுடைய நண்பனாகக் கருதுவார்களேயானால் அவர்களுக்கு விரோதமாகவும் உண்ணாவிரதம் இருக்கக் கூடிய உரிமையைப் பெறுவேன். ஹிந்துக்களுடைய ஹிருதயத்திலும் முஸ்லிம்களுடைய ஹிருதயத்திலும் நட்பு உணர்ச்சி உண்டான பிறகுதான் நான் கிழக்கு வங்காளத்தைவிட்டு வெளியேறுவேன். அவ்வித நட்புணர்ச்சி உண்டாகாவிட்டால் எனக்கு பூலோகத்தில் இருக்க வேண்டுமென்ற ஆசை இல்லை.

### தஸ்காரியா

17ம் தேதி காலையில் நாஜிர்கில் என்னும் கிராமத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள தாஸ்காரியா என்னும் கிராமத்துக்கு காந்தியடிகள் சென்றபொழுது அவரிடம் பல பெண்கள் வந்து தங்கள் குறைகளைக் கூறினார்கள். எங்கள் எல்லோரையும் முஸ்லிம்களாக்கி இருந்தார்கள், இப்பொழுது மறுபடியும் ஹிந்துக்கள் ஆகி இருக்கிறோம் என்று கூறினார்கள். அவர்களிடம் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு கூறினார் :—

"பலாத்காரமாக செய்யப்பட்ட மதமாற்றங்கள் சட்டப்படி செல்லாது என்று ஜில்லா மாஜிஸ்திரேட் உத்தரவிட்டு விளம்பரப்படுத்தி இருக்கிறார். பலாத்காரமாக மதமாற்றம் செய்யப்பட்டவர்களை எல்லாம் மறுபடியும் ஹிந்துக்களாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இரு வகுப்பாரிடத்திலும் மனக்கசப்பு மறைந்து சிநேக பாவம் உண்டாகும்.

கடத்தப்பட்ட பெண்களில் சிலர் இன்னும் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களை உடனே அவர்களுடைய குடும்பத்தாரிடம் அனுப்பிவிடவேண்டும். இன்று ஒரு வண்ணார் என்னிடம் தம்முடைய ஒரு வயது குழந்தையைக் கொண்டு வந்து காட்டினார். அந்தக் குழந்தை ஒரு முஸ்லிமிடம் இருந்ததாகவும், போலீஸ் உதவியைக்கொண்டு அதை திரும்ப பெற்று வந்ததாகவும் என்னிடம் கூறினார். இந்த மாதிரி காரியங்கள் நடக்கவொட்டாமல் செய்வது முஸ்லிம் சகோதரர்களுடைய கடமையாகும். நடந்துபோன காரியங்களுக்கு பச்சாதாபத்தைத் தெரிவித்து இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்கிறோமென்று உறுதி கூற வேண்டும். பிழையை மறைக்க முயலுகிறவர்கள் ஒரு நாளும் அவைகளைத் திருத்திக் கொள்ள முடியாது. நான் உண்மை என்னும் கடவுளின்பக்தன். நான் வக்கீலாக இருந்தபொழுதுகூட கேஸ் நடத்த வேண்டுமானால் கக்ஷிக்காரர்கள் உண்மையை என்னிடம் உரைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தேன். பொய்யான வழக்கை நான் நடத்துவதில்லை. இந்தக் காரணத்தினால் உண்மையான வழக்குகள் தான் என்னிடம் கொண்டு வரப்பட்டன. நான் வக்கீலாக இல்லாமல் ஆகி வெகு காலமாகி விட்டது. ராஜத்துரோக குற்றம் செய்ததாகக் கூறி என்னுடைய பெயரை வக்கீல் ஜாப்தாவிலிருந்து நீக்கிவிட்டார்கள். ஆனபோதிலும் நான் இப்பொழுதும் அந்தக் கொள்கையையே அனுஷ்டித்து வருகிறேன். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் நான் கூறக்கூடிய யோசனை யாதெனில் அவர்கள் தங்களிடத்திலுள்ள தீமையை ஒழித்துவிட வேண்டுமென்பதுதான். அப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் சமாதானமாக வாழவும் முடியாது. பரஸ்பரம் மரியாதை ஏற்படவும் முடியாது."

### ஒரு சம்பவம்

காப்ரான் சாகிப் பேசிய பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறிய சில வார்த்தைகளின் பயனாக 17ம் தேதி மாலை நடந்த கூட்டத்திற்கு பெண்கள் ஒருவர்கூட வரவில்லை. ஹிந்துக்களும் வெகு சிலரே வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் பெரும்பாலும் முஸ்லிம்களாகவே இருந்தார்கள். பிரார்த்தனைக்குப்பின் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு பேசினார்:-

"காப்ரான் சாகிப் பேசியதைக் குறித்து கூட்டத்திலேயே ஒரு நண்பர் பேச வேண்டுமென்று கோரியதற்கு நான் இணங்காததால் ஹிந்துக்களுக்கு மனவருத்தம் உண்டாயிருக்கிறது என்றும் அதனால் இன்று கூட்டத்திற்கு வரவில்லை என்றும் தெரிகிறது. நான் செய்தது தவறென்று எனக்குத் தோன்றவில்லை. பிறரைத் திருப்திப்படுத்துவதற்காக நான் எதுவும் பேசுவதுமில்லை, செய்வதுமில்லை. பிறர் என்ன நினைப்பார்கள் என்பதை நினையாமலேதான் ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என்றே நான் எப்பொழுதும் போதித்து வந்திருக்கிறேன். சரி என்று நம்புவதையே செய்பவர்கள் யாரையும் அஞ்ச வேண்டியதில்லை."

கூட்டம் முடிந்த பிற்பாடு கஷ்ட நிவாரண ஸ்தாபனத்தின் காரியதரிசி காந்தியடிகளிடம் வந்து ஹிந்துக்கள் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கவில்லை என்றும் அன்று ஞாயிற்றுக்கிழமையாகவும் சந்தை நாளாகவும் இருந்தபடியால் முஸ்லிம்களுக்கும் போக்கிரிகளுக்கும் பயந்து பெண்கள் வரவில்லை என்றும் கூறினார்.

19ம் தேதி மாலை மாதுபூர் என்னுமிடத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறியதாவது :—

"காரியதரிசி கூறியது என்னை ஏமாற்றுவதற்காக கூறப்பட்டதாக ஒரு நண்பர் என்னிடம் கூறினார். ஹிந்துக்கள் என்னுடைய கூட்டத்தை பகிஷ்கரித்திருந்தால் நான் அதற்காக வருந்தவில்லை. அதற்காக அவர்கள் என்னிடம் மன்னிப்பு கேட்க கடமைப்பட்டவரும் அல்லர். அவர்கள் பயத்தின் காரணமாக வராதிருந்தால் என்னிடம் எவ்வித மன்னிப்பும் கேட்கமுடியாது. பயந்து போயிருந்தால் அது அவர்கள் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும். ஆண்களும் வரவில்லையே, அவர்களும் கோழைகள்தானா? முஸ்லிம்கள் அவர்களை விழுங்கிவிடுவார்களா? அவர்கள் கோழைகளாயிருந்தால் இந்த தேசத்தில் உயிர் வாழ உரிமையற்றவர்களே யாவார்கள்."

காஜிர்கில், — 24-11-46 — பியாரேலால்.

## காந்தீய வாதிகளுக்கு ஒரு வேண்டுகோள்

வங்காளத்தில் நடைபெற்ற மத வெறிக் கொடுமையை மாற்றி விட மகாத்மாஜி கிழக்கு வங்காளத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் அவருடைய உபதேசங்கள் நாடு முழுவதும் பரவ நாம் எல்லோரும் மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல் பசி நோக்காமல் வேலை செய்ய வேண்டும், இது புனிதமான சேவையாகும். காந்தியடிகளுடைய போதனைகளைத் தாங்கி வாரா வாரம் தமிழ் ஹரிஜன் வெளி வருகிறது. தமிழ் ஹரிஜன் ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்லும்படி காந்தீய வாதிகள் செய்யவேண்டும். ஜில்லா, தாலுகா, நகர, கிராம காங்கிரஸ் கமிட்டிகள் சிரத்தை எடுத்து வேலை செய்தால் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தமிழ் ஹரிஜன் செல்லுவது சுலபம். இது உயர்ந்த காந்தீய சேவையாகும். உங்கள் ஊரில் தமிழ் ஹரிஜன் ஏஜெண்டு இல்லையானால் நல்ல தேசீய ஊழியர் ஒருவர் பெயரை சிபார்சு செய்தால் தமிழ் ஹரிஜன் ஏஜண்டாக நியமிக்கலாம். காந்தீய வாதிகளை சிரத்தை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

—சின்ன அண்ணாமலை,
தமிழ் ஹரிஜன் நிர்வாகி.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை